**மதவாச்சி பிரதேச சபையி - 2022**

------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மதவாச்சி பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த விரிவான வருமானக் கூற்று / தேறிய சொத்துக்கள் / உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதவாச்சி பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் உள்ளுராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியத்திற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமத்திற்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளுராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்ரான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தௌவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 04 சொத்துகள் குத்தகைக்கு விடப்பட்டமைக்காக பெற வேண்டிய வருமானம் ரூபா.1,320,451 குறைவாக குறிப்பிடப்பட்டுள்ளது. | ஏற்றுக் கொள்கிறேன். | சரியான பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் உலகக் குழந்தைகள் தினத்தைக் கொண்டாடும் நிகழ்ச்சிக்காக நன்கொடையாகப் பெறப்பட்ட ரூபா.85,000 மீண்டெழும் செலவினங்களுக்கான மானியமாகக் காட்டப்படுவதற்குப் பதிலாக நானாவித வருமானமாக விரிவான வருமானக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | மீண்டமும் நன்கொடைகள் சரியாக இனங்காணப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்ட ரூபா.14,000,000 பெறுமதியான தண்ணீர் பவுசர் மீளாய்வாண்டில் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் கொள்வனவுகளாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | மூலதன அமைப்பு அதிகரித்துள்ளதால், இது முதலீட்டு நடவடிக்கையாக கருதப்படுகிறது. | காசு உட்பாய்ச்சலொன்று ஏற்படாததால் முதலீட்டு நடவடிக்கையாக கருதப்பட முடியாது. |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கூற்றின்படி, மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ அங்கீகரிக்கப்படாத மூலதன மானியங்கள் ரூபா.47,266,860 ஆக இருந்ததுடன் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றின்படி இது ரூபா.30,549,562 ஆக இருந்தமையால் ரூபா.16,717,298 ஆன வேறுபாடொனறு காணப்பட்டது. | மூலதன மானியச் சீராக்கத்தினால் வேறுபாடொன்று ஏற்பட்டது. | அட்டவணைகள் நேரொத்த அறிக்கையுடன் இணங்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ரூபா.9,848,464 கூட்டுப் பெறுமதியடைய 10 கணக்கு விடயங்களுக்காக போதுமானளவு சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின்போது அவற்றை திருப்திகரமாக உறுதிப்படுத்த முடியாதிருந்தது | கோவையொன்று மட்டும் உள்ளது. | உறுதிப்படுததல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா.11,835,280 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா.3,868,526 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்படுகின்றது.

| | வருமான வகை | 2022 மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2021 மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 4,024,692 | 4,501,647 | 3,590,980 | 4,933,864 | 4,158,657 | 4,730,492 | 2,759,509 | 4,023,197 |
| (ii) | வாடகை | 23,069,415 | 18,328,055 | 11,378,639 | 27,515,574 | 21,456,563 | 14,140,764 | 4,687,042 | 20,566,158 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 361,730 | 502,683 | 502,683 | 90,500 | 4,322,703 | 7,358,662 | 7,374,022 | 90,500 |
| (iv) | ஏனைய வருமா னம் | 13,246,712 | 20,503,417 | 21,768,719 | 15,430,776 | 5,436,146 | 5,169,769 | 8,536,443 | 16,696,078 |
| | | 40,702,549 | 43,835,802 | 37,241,021 | 47,970,714 | 35,374,069 | 31,399,687 | 23,357,016 | 41,375,933 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பதிலான செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரிப்பதன் செயலாற்றல் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீத வரி மற்றும் வரி** | | |
| (i) 2015 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் அடிப்படையில் வீதவரி பட்டியலிடப்பட்டமை செய்யப்பட்டதுடன் 2022 திசெம்பர் 31 இல் ரூபா.4,217,014 ஆன வீதவரி வசூலிக்கப்படவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | புதிய மாற்றங்களின் பிரகாரம் பட்டியலிடப்பட்டல் செய்யப்படவில்லை. |
| (ii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நிலுவை தொழில் வரிகள் ரூபா.231,750 மற்றும் நிலுவை வணிக வரி ரூபா.485,100 ஆக இருந்தன. | -மேற்படி- | அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட. வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| (i) 2018 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின்படி, பிரதேச பழைய வர்த்தக தொகுதியில் 54 கடை அறைகள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதுடன் 2022 மார்ச் 04 ஆம் திகதிய 2022/03/03/11/விசேட ஆம் இலக்க பொதுச் சபை தீர்மானத்தின்படி மாதாந்த வாடகையில் 50% மட்டுமே வசூலிக்கப்பட்டிருந்தது. அதறகாக 1987 இன் 15 ஆம் இலக்க உள்ளுராட்சி பிரதேச சபை சட்டத்தின் 182 ஆம் பிரிவின் | -மேற்படி- | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் மாகாண சபை முதலமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | 2022 திசெம்பர் 31 வரை 04 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அறவிடப்படாது காணப்பட்ட ரூபா.24,088,687 ஆன குத்தகை வாடகை மற்றும் ரூபா.3,222,637 ஆன சொத்து கடைவாடகை ஆகியவற்றை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (iii) | சபைக்கு சொந்தமான இயந்திர உபகரணங்களை வாடகைக்கு விடுவதற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய 01 முதல் 03 வருடங்கள் வரை வசூலிக்கப்படாமல் இருந்த இயந்திர வாடகை ரூபா.204,250 ஐ அறவிடுவதற்கு மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட. வேண்டும். |
| (iv) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் புதிய வணிக தொகுதியின் வாடகை உரிய திகதியில் செலுத்தப்படாமையால் அறவிடப்பட வேண்டிய தாமதக்கட்டணம் ரூபா.8,706,079 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (v) | அதிகார பிரதேசத்தில் உள்ள விளம்பர பலகைகள் மற்றும் தொலைபேசி ஒலிபரப்பு கோபுரங்கள் பற்றிய கணக்கெடுப்பொன்று மேற்கொள்ளப்பட்டு அவை ஆவணப்படுத்தப்படவில்லை மற்றும் திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகை ரூபா.638,550 ஆகும். | -மேற்படி- | -மேற்படி- |
| **(இ)** | **ஏனைய வருமானம்** | | |
| | மாகாண சபை முதலமைச்சரின் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நீதிமன்ற அபராதங்கள் ரூபா.2,820,849 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா.2,552,450 அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டன. | -மேற்படி- | அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) இறைச்சிக்கூடங்களைப் பராமரித்தல்** | | |
| முஸ்லிம்ஹல்மில்லேவ, உடும்புகல மற்றும் சியம்பலகஸ்கட இறைச்சி கூடங்களுக்கு தேவையான இறைச்சி கூடங்கள் அமைக்கப்படாததால் முஸ்லிம்ஹல்மில்லேவ, உடும்புகல மற்றும் சியாம்பலகஸ்கட இறைச்சிக் கூடங்களை பெறுவதற்கு டெண்டர்தாரர்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே, சட்டவிரோத இறைச்சிக் கூடங்கள் மூலம் இறைச்சி வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன்.. | மாட்டிறைச்சி வியாபாரத்தை முறைப்படுத்த வேண்டும். |
| **(ஆ) வாராந்த மலசலகூட அமைப்பை நிர்மாணித்தல்** | | |
| 2020 ஆம் ஆண்டில், ரூபா.1,222,415 செலவில் கட்டப்பட்ட மலசலகூடத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடையாததால், 2022 யூன் 01 இல் ரூபா.38,780 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் அதில் பொருத்தப்படவில்லை. | எதிர்காலத்தில் முறையான பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். முறையாக தொடர்ந்து பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கட்டுமானம் முடிக்கப்பட்டு முறையாக தொடர்ந்து பராமரித்துச் செல்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 திண்மக்கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபையால் கழிவு முகாமைத்துவ நிலையம் ஒன்று நிறுவப்பட்ட போதிலும் அது செயற்படாத காரணத்தினால் சபைப் பகுதியில் சேகரிக்கப்பட்ட கழிவுகள் இசின்பஸ்ஸகல பாதகாப்புக்காட்டின் திறந்தவெளிப் பகுதியில் கொட்டப்பட்டு எரிக்கப்பட்டுள்ளன. | ஏற்றுக்கொள்கின்றேன்.. | திண்மக்கழிவு முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும் |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பிரதேச சபைக்கு சொந்தமான ரூபா.1,075,000 பெறுமதியான இலக்கம் கொண்ட டபள் கெப் வண்டி மற்றும் ரூபா.1,319,050 பெறுமதியான மகேந்திரா கெப் வண்டி என்பன ஒரு உறுப்பினரால் | ஏற்றுக்கொள்கின்றேன். | இந்த வாகனங்களை சபைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தனது சொந்த விருப்பத்தின் பேரில் ஒரு வருடத்திற்கு முன்னர் சபையின் அனுமதியின்றி முறையற்ற விதத்தில் பழுதுபார்க்கும் நிறுவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 03 வருடங்களுக்கு முன்னர் சபைக்கு அருகாமையில் உள்ள கராஜில் பழுதுபார்ப்பதற்காக கொண்டு செல்லப்பட்ட ரூபா.1,000,000 பெறுமதியான ஜெனரேட்டர் துண்டு துண்டாக, சம்பந்தப்பட்ட கொட்டகையில் பாதுகாப்பின்றி குவிக்கப்பட்டிருந்ததுடன், உரிய பழுதுபார்த்தல் செய்யப்பட்ட பின்னர் அந்த இயந்திரத்தை சபைக்கு கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. | -மேற்படி- | இந்த இயந்திரத்தை சபைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டு பிரதேச சபையின் மேல் தளத்தில் அமைந்துள்ள சபை மண்டபத்தில் ரூபா.706,140 செலவில் நிறுவப்பட்ட 06 குளிரூட்டிகள் மூன்று கட்ட மின் அமைப்பில் நிறுவலுக்கான மின் வயரிங் தரப்படுத்தப்படாததால் 03 வருட காலமாக செயலிழந்து காணப்பட்டன. | ஏற்றுக்கொள்கின்றேன்.. | மின் வயரிங் அமைப்பு தரத்தின் பிரகாரம் நிறுவப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சீ.பீ நகரில் உள்ள இலக்கம் 01 மற்றும் 02 கடை அறைகளுக்காக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக அறவிடப்பட வேண்டிய கடை வாடகை தலைவரின் தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் பதிவளிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் சபைக்கு ரூபா.905,500 ஆன வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. இந்தக் கடை அறைகளுக்கு 2022 ஆம் ஆண்டுக்கு செலுத்த வேண்டிய ரூபா.606,000 வாடகையும் அவர்களால் செலுத்தப்படவில்லை. | -மேற்படி- | அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட. வேண்டும். |

## 3.5 சொத்து முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான பழுதுபார்ப்பு அலகு வளாகத்தில 2019 ஆம் ஆண்டில் நீர் சுத்திகரிப்பு நிலைய நிர்மாணத்தின்போது சபையின் அலட்சியத்தால் ரூபா.2,343,240 விளைவற்ற செலவொன்றாக | ஏற்றுக்கொள்கின்றேன்.. | தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டதுடன் வருடாந்தம் ரூபா.288,000 மேலதிக கிரயமொன்று செலவிடப்பட்டு குடிநீர் வெளியில் இருந்து வாங்குவதற்கு ஏற்பட்டது. | | வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டு பிரதேச சபையின் மேல் தளத்தில் அமைந்துள்ள சபை மண்டபத்தில் ரூபா.227,139 செலவில் நிர்மாணிக்கப்பட்ட மலசலகூடம் அமைக்கப்படாமையால் 04 வருடங்களாக பாவனையின்றி காணப்பட்டது. | -மேற்படி- | நீர் விநியோக அமைப்பொன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான கெப் வாகனமொன்று 2020 ஜூன் 16 அன்று பிரதேச சபையின் தலைவரால் ஓட்டிச் செல்லப்பட்டபோது விபத்துக்குள்ளானதுடன் அது தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் நிதிப்பிரமாணம் 104(4) ஆகியவற்றின் அடிப்படையில் ஆரம்ப மற்றும் முழுமையான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. விபத்தின் போது சாரதியாக இருந்த முன்னாள் தலைவரினால் அவரின் விருப்பப்படி அது அனுராதபுரம் ரஜரட்ட ஆட்டோ மொபைல் பணியகத்திற்கு (Rajarata Auto Mobile Bureau) பெறுகை நடைமுறைகள் எதுவுமின்றி கொண்டு செல்லப்பட்டிருந்தது. இதற்காக அக்ரஹார காப்புறுதி நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்ட ரூபா.414,081 இயந்திர பொறியியலாளரின் பரிந்துரையின்றி பழுதுபார்க்கும் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன்.. | இது தொடர்பாக முறையான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு வாகனத்தை சபைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் பொரட்கள் கணக்கெடுப்பின்படி, ரூபா 100,069 மதிப்புள்ள 545 புத்தகங்கள் மற்றும் அதன் பெறுமதி அடையாளம் காண முடியாத 81 புத்தகங்கள் மதவாச்சி நூலகத்தில் இருந்து காணாமல் போயிருந்ததுடன் அந்த இழப்பை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன்.. | இழப்புக்கள் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.8 காட்சி முறைகேடு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் க்ரூ கெப்வண்டிக்கு 2021 நவம்பர் 18 மற்றும் 2022 மார்ச் 19 ஆகிய திகதிகளில் வாங்கப்பட்ட ரூபா.179,700 மதிப்புள்ள 10 டயர்கள் பொருத்தப்பட்டிருப்பது உறுதி செய்யப்படாததால், அது தொடர்பான விசாரணை நடாத்தப்பட்டு சம்பந்தப்பட்ட சாரதி மற்றும் பொறுப்பான தரப்பினரிடமிருந்து அத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன்.. | முறையான விசாரணை நடாத்தப்பட்டு இழப்புக்கள் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிபுந்து அறவீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மீண்டும் இவ்வாறு எற்படாதிருப்பதற்கு தேவையான உள்ளக கட்டுப்பாடொன்று எற்படுத்தப்பட வேண்டும். |